IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No. 200/2023
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 12.10 PM.

வா.சா.2 சாட்சி செல்வராஜ் த.பெ.பழனிச்சாமி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additional District Munsif on 01.12.2025 in accordance with the provisions of Act XX141.**

1, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. இந்த வழக்கில் 1ம் வாதியின் கணவரும், எனது மனைவியும் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். 1ம் வாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியம் சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். சின்னசிவனாண்டி, துரைச்சாமி அவர்களை பற்றிய விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி நபர்களின் தகப்பனாருக்கு ஆதியில் பூர்வீக சொத்து எவ்வளவு இருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

2. சின்னசிவனாண்டி, துரைச்சாமி அவர்கள் குடும்பத்திற்குள் ஏற்பட்ட பாகபிரிவினை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் லாரி ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். மேலக்குயில்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் லாரி ஓட்டுனரை தவிர வேறு தொழில் செய்யவில்லை என்றால் சரிதான். தற்போது வீட்டில்தான் இருந்து வருகிறேன். சின்னசிவனாண்டி, துரைச்சாமியின் உடன் பிறந்தவர்கள்தான் எட்வர் பால்ராஜ் என்றால் சரிதான். எட்வர் பால்ராஜ் என்பவரின் மகன்தான் தவராஜ் என்றால் சரிதான்.

3. தவராஜின் மனைவிதான் 1ம் வாதி என்றால் சரிதான். அவர்களுடைய குழந்தைகள்தான் 2 முதல் 4 வாதிகள் என்றால் சரிதான். எட்வர் பால்ராஜ் எந்த வருடம் இறந்தார் என்றால் வருடம் தெரியாது. எட்வர் பால்ராஜிக்கு பாத்தியப்பட்ட சொத்துகள் எந்தெந்த ஊரில் எந்த சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் உள்ள சொத்துக்கள் இருந்தது என்ற விபரம் தெரியுமா என்றால் எல்லா சொத்துக்களும் மேலக்குயில்குடியில் இருந்தது. ஆனால் சர்வே எண், விஸ்தீரணம் எனக்கு தெரியாது.

4. மேலக்குயில்குடியில் உள்ள சொத்து சம்பந்தமாகத்தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியும். எத்தனை இலக்க சொத்துக்களுக்கு வழக்கு நடைபெறுகிறது என்று தெரியுமா என்றால் ஒரு இலக்க சொத்துக்களுக்கு வழக்கு நடைபெறுகிறது. இந்த வழக்கு சொத்து சம்பந்தமாக ஏற்கனவே மதுரை மாவட்ட வருவாய் அலுவலகத்தில் விசாரணை நடைபெற்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி மாவட்ட வருவாய் அலுவலகத்தில் வாதிகள் தரப்பில் ஆவணங்கள் சமர்ப்பித்து விசாரணை நடைபெற்றது என்றால் சரிதான்.

5. மேற்படி விசாரணையில் ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட உத்தரவு என்ன என்பது எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி உத்தரவை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி உத்தரவு நிலவுடமை மேம்பாட்டு திட்டத்தில் தவறு இருப்பதாக அதனை சரிசெய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். தாவா வழக்கில் கட்டுப்பட்ட விஸ்தீரணம் என்பது சர்வே எண்.90/14 ல் கட்டுப்பட்ட ஒரு பகுதி என்றால் சரிதான்.

6. சர்வே எண்.90/14 ல் மொத்தம் எத்தனை செண்டு உள்ளது என்றால் 14 செண்டு மட்டுமே உள்ளது. மேற்படி 14 செண்டுக்குதான் பட்டா எண்.496 என்று எட்வர் பால்ராஜிக்கு பட்டா ஏற்பட்டது என்றால் சரிதான். சர்வே எண்.90/14 ல் மொத்தம் 14 செண்டு மட்டும் உள்ளது என்றும் அந்த சொத்து வாதிகளுக்கு பாத்தியம் என்று சொல்வதற்குதான் வந்துள்ளேன் என்றால் சரிதான். எட்வர் பால்ராஜ் மற்றும் தவராஜ் அனுபவம் செய்து வந்ததற்கு ஆவணம் பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை.

7. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம் 1ம் வாதி தகவல் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் நான்தான் சொன்னேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் அனைத்தும் தவறானவை என்றாலும் வாதிகள் எனக்கு நெருங்கிய உறவினர் என்பதாலும் தவறான விபரத்தை சொல்லி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு சொத்துக்கள் தொடர்பாகவும் 1 முதல் 4 வாதிகள் மற்றும் 1 முதல் 4 பிரதிவாதிகள் முன்னோர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்: 12.35 PM.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.12.01 12:32:42 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருமங்கலம்.